## In the Court of the District Munsif, Eraniel

Original Suit No. 26/2019 Date:03.01.2025

(P.W.1)-ராஜா

குறுக்கு விசாரணை

1. நான் இராணுவத்தில் பணியாற்றி ஓய்வு பெற்றவர் என்றால் சரிதான். இவ்வழக்கின் வாதியின் தந்தையான ரஜினி வழக்கின் ஒவ்வொரு வாய்தாவிற்கும் என்னை அழைத்துவருவார் என்றால் சரிதான். வழக்கின் அனைத்து விவரங்களும் எனக்கு தெரியும் என்றால் தெரியும். வழக்கு சொத்தின் சர் வே எண் தெரியுமா என்றால் நினைவில்லை. என் சொந்த ஊர் மைலோடு என்றால் சரிதான். தற்போது தொழிக்கோட்டில் தாமசிக்கிறேன். அது என் மனைவியின் ஊர் என்றால் சரிதான். தொழிக்கோட்டிற்கு நான் சென்று எத்தனை வருடங்கள் ஆகின்றது என்றால் 2003-ல் ஓய்வு பெற்று அதன்முதல் நான் தொழிக்கோட்டில் தாமசிக்கிறேன். 2003 வரைக்கும் நான் மைலோட்டில்தான் இருந்தேன் என்றால் சரிதான். மைலோட்டில் தாமசிக்கும்போது போலீஸாரின் அப்பா ஐயப்பன் என்பவரை தாக்கியது சம்மந்தமாக என் மீது ஒரு குற்ற வழக்கு உள்ளது என்றால் சரியல்ல.

2. மேற்படி சம்பவத்திற்கு பிறகு மைலோடான எங்களது ஊரில் உள்ளவர்கள் எதிர்ப்பின் காரணமாக வாதியின் சித்தப்பாவும் நானும் சேர்ந்து ஊர்க் கோவிலை பூட்டிவிட்டதன் காரணமாக நான் தொழிக்கோட்டிற்கு சென்றுவிட்டேன். என் மனைவி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பணிபுரிகிறார் என்றால் சரிதான். சர்வே எண் 60/13 சொத்தின் விஸ்தீரணம் எவ்வளவு என்றால் தெரியாது. சொத்து யாரால் பாகம் வைக்கப்பட்டது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது.

(P.W.1)-ராஜா

குறுக்கு விசாரணை

சர்வே எண் 60/13 ல் வாதி மற்றும் பிரதிவாதிக்கு எவ்வளவு என்றால் தெரியாது. 1 ½ சென்ட் வழி நான் வாங்கியுள்ளேன். 5 சென்ட் வீடு உள்ளது. அந்த வீடு எனக்கு உரிமைப்பட்டதல்ல என்றால் வாதிக்கு உரிமைப்பட்டது. என் வாதுரையில் சொத்து பாகம் வைக்கப்பட்ட சங்கதி வாதியின் தந்தை வெளிநாட்டில் இருக்கும் சங்கதிகளை சொல்லியுள்ளேனா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

3. சர்வே எண் 60/13 ல் கிழக்கு பக்கம் பிரதிவாதி சுந்தம்பிள்ளையில் வீடு உள்ளது என்றால் சரிதான்.அவரின் வீடு பக்கம் மாட்டு தொழவம் உள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.அப்போது அவருக்கு மாட்டு வண்டி அந்த வழியாகத்தான் சென்றுவந்தது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வழக்கு சொத்தில் உள்ள காம்பவுண்ட் சுவர் மேற்கிலிருந்து கிழக்காக சென்று பின் வடக்கிலிருந்து தெற்காக செல்கிறது என்றால் சரிதான். மேற்சொன்ன காம்பவுண்ட் சுவரின் நீளம் மற்றும் உயரம் தெரியுமா என்றால் தெரியாது. காம்பவுண்ட் சுவரை பிரதிவாதிகள் உடைக்க முயற்ச்சி செய்ததாக நான் சொல்லியுள்ள நிலையில் அது யார்யார் என்றைக்கு உடைக்க வந்தார்கள் என்று தெரியுமா என்றால் தெரியாது. காம்பவுண்ட் சுவர் உடைக்க வந்தது சம்பந்தமாக காவல்நிலையத்தில் புகார் கொடுத்தது சம்பந்தமான விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

(P.W.1)-ராஜா

குறுக்கு விசாரணை

4. மேற்சொன்ன சங்கதிகள் நிருபிக்க எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. சர்வே எண் 60/13 சம்பந்தமாக எத்தனை வழக்குகள் இதற்கு முன்பாக இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு மேல் முறையீடு செய்யப்ட்டது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. பிரதிவாதி சுந்தரம்பிள்ளை வீட்டிற்கு மின் இணைப்பு எடுக்க விடாததால் வாதியின் தந்தை தடுத்ததன் காரணமாக இந்நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 143/2001 என்ற வழக்கு தாக்கல் செய்யப்பட்ட விவரம் தெரியுமா என்றால் தெரியாது. மேற்சொன்ன வழக்கில் நீதிமன்ற ஆணையர் நியமிக்கப்பட்டு அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்தார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. மேற்சொன்ன வழக்கை எதிர்த்து மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்ட விவரம் தெரியுமா என்றால் தெரியாது. நாங்கள் விலைக்கு வாங்கிய பிறகு எந்த வழக்கும் தாக்கல் செய்யப்படவில்லை.

5. மேல்முறையீட்டு வழக்கில் பிரதிவாதிக்கு மின் இணைப்பு வழங்க மேல்முறையீட்டு நீதிமன்றம் அனுமதி வழங்கியது என்றால் தெரியாது. இந்தவழக்கை எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் பிரதிவாதி நான் வாங்கிய 1 ½ சென்டை ஆக்கிரமிக்க முயற்ச்சித்ததாக தடுக்க வேண்டி இவ்வாக்கை தாக்கல் செய்துள்ளேன்.

(P.W.1)-ராஜா

**<u>குறுக்கு விசாரணை</u>**

**(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது)**

(ஒப்பம்)

மாவட்ட உரிமையியல் நீதிபதி
இரணியல் (பொறுப்பு)